# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP – II & IIA PRELIMINARY EXAM

## பொதுத்தமிழ்-பகுதி-அ-இலக்கணம்

## அலகு – 8

## ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்

**மயங்கொலிகள்**

மணம் – மனம்

மேலே உள்ள இரண்டு சொற்களையும் கவனியுங்கள். உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கின்றன. ஆனால் இரண்டுக்கும் இடையே பொருள் வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.

ண, ன, ந

ல, ழ, ள

ர, ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

**ண, ன, ந – எழுத்துகள்**

ண – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந – நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

(ட்,ண்) (த், ந்) (ற், ன்) ஆகியவை இன எழுத்துகள்.

இந்த இன எழுத்துகளைக் கொண்டு டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,

தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும்,

றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

ணகரம் வர வேண்டிய இடத்தில் னகரம் எழுதப்படுமானால் பொருள் மாறுபடும் என்பதை உணர்க.

(எ.கா.) வாணம் – வெடி பணி - வேலை

வானம் - ஆகாயம் பனி – குளிர்ச்சி

**ல, ள, ழ – எழுத்துகள்**

ல– நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும். இது ’வ’ போல இருப்பதால் ’வகர லகரம்’ என்கிறோம்.

ள– நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம். இது ’ன’ போல இருப்பதால் ’னகர ளகரம்’ என்று கூறுவர்.

ழ– நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம். இது ’ம’ போல இருப்பதால் ’மகர ழகரம்’ என்று கூறுவது இலக்கண மரபு.

**ர, ற – எழுத்துகள்**

ர – நாவின் நுனி மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

ற – நாவின் நுனி மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

**ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் அறிதல் ரகர றகரச் சொற்களின் வேறுபாடுக**

1. அரம் – ஒரு கருவி

   அறம் – தருமம்

2. அரி – வெட்டு

   அறி – தெறிந்துகொள்

3. அரை – பாதி

   அறை – வீட்டு உள்ளிடம்

4. அரிவை – பெண்

   அறிவை – தெரிந்து கொள்

5. அருமை – சிறப்பு

   அறுமை – நிலையின்மை

6. ஆர – நிறைய

   ஆற – தணிய

7. இர – இரப்பு

   இற – இறப்பு

8. இரை – தீனி, உணவு

   இறை – கடவுள்

9. இரவு – இரவு நேரம்

   இறவு – இறத்தல்

10. இரங்கு - இரங்குதல்

    இறங்கு - கீழே இறங்குதல்

11. இருப்பு - உலோகம்

    இறுப்பு - புதர்

12. ஈரல் - வருந்துதல்

    ஈறல் - நெருக்கம்

13. உரவு - வலிமை

    உறவு - சுற்றம்

14. உரு வடிவம்

    உறு - மிகுதி

15. உரை - சொல், தோல்

    உறை - மூடி

16. உரல் - தானியம் குற்றும் கருவி

    உறல் – துன்பம்

17. உரவு - வலிமை

உறவு - உறவினர்

18. ஊர - நகர

ஊற - சுரக்க

19. எரி - தீ

எறி - வீசு

20. ஏரி - நீர்நிலை

ஏறி - மரம் ஏறுதல்

21. ஒரு ஒன்று

ஒறு - பொருத்தல்

22. கரி - அடுப்புக்கரி

கறி - மாமிசம்

23. கரை - ஓரம்

கறை - அழுக்கு

24. குருகு - அன்னம்

குறுகு - சுறுங்கு

25. கூரை – வீட்டு முகடு

கூறை – ஆடை

26. கூரிய – கூர்மையான

கூறிய – சொல்லியபடி

27. செரு – திமிர்

செறு – வயல்

28. செரித்தல் – சீரணமாதல்

செறித்தல் – திணித்தல்

29. தரி அணிந்து கொள்

தறி – வெட்டு

30. திரை – அலை

திறை – கப்பம்

31. துரவு – கிணறு

துறவு – துறந்துவிடுதல்

32. நிரை – வரிசை

நிறை – நிறைத்து வைத்தல்

33. பரவை – கடல்

    பறவை – பறக்கும் இனம்

34. பரி – குதிரை

    பறி – பறித்துக் கொள்ளுதல்

35. பொரி – நெல் பொரி

    பொறி – இயந்திரம்

36. மரம் – தரு

    மறம் – வீரம்

37. மரி – இற

    மறி – மான்குட்டி

38. விரல் – கைவிரல்

    விறல் – வெற்றி

**ணகர னகர சொற்களின் வேறுபாடுகள்:**

1. அண்ணம் – மேல்வாய்

   அன்னம் – பறவை

2. அணை - வரப்பு

   அனை - அத்தனை

3. அணல் - தாடி

   அனல் - நெருப்பு

4. அரண் - மதில்

   அரன் - சிவன்

5. ஆணி - இரும்புத்துண்டு

   ஆனி - மாதம்

6. ஆணை - கட்டளை

   ஆனை - யானை

7. ஆண் - ஆண்பிள்ளை

   ஆன் - பசு

8. ஊண் - சோறு

   ஊன் - மாமிசம்

9. ஊண் - உணவு

   ஊன் - மாமிசம்

10. எண்ண - நினைக்க

என்ன - கேள்வி

11. கண்ணன் - கிருஷ்ணன்

கன்னன் - கர்ணன

**லகர, ளகர, ழகர சொற்களின் வேறுபாடுகள்:**

1. இலை - முற்றிய தளிர்

இளை - மெழிதல்

இழை - நூல்

2. உலவு - திரிதல்

உளவு - வேவு பார்

உழவு - பயிர்தொழில்

3. உலை - கொதிகலன்

உளை - சேறு

ழை - மான்

4. எல் - சூரியன்

எள் - எண்ணெய்வித்து

5. ஒலி – சத்தம்

   ஒளி – வெளிச்சம்

   ஒழி – நீக்கு

6. கலி – உணவு

   களி – மகிழ்ச்சி

   கழி – கோள், தடி, மிகுதி

7. கலை -வித்தை, கல்வி

   களை – நீக்கு

   கழை – மூங்கில், கரும்பு

8. கிளவி – சொல்

   கிழவி – முதியவர்

9. கலி – உணவு

   களி – மகிழ்ச்சி

   கழி – கோள், தடி, மிகுதி

10. கலை -வித்தை, கல்வி

    களை – நீக்கு

    கழை – மூங்கில், கரும்பு

11. கிளவி – சொல்

    கிழவி – முதியவர்

12. குளி – குளித்தல்

    குழி – பள்ளம்

13. சூல் – கர்ப்பம்

    சூள் – சபதம்

    சூழ் – சுற்றிக்கொள்ளுதல்

14. தலை – சிரசு, முதன்மை

    தளை – கட்டுதல்

    தழை – புல், இழை

15. தால் நாக்கு

    தாள் – திருவடி

    தாழ் – தாழ்ப்பாள்

16. தாளி – குழம்பு தாளித்தல்

    தாழி – குடம்

    தாலி – கணவன் மனைவிக்கு கட்டும் சின்னம்

17. நலிவு - நோய்

    நளிவு - செறிவு

18. மால் - திருமால், பெருமை

    மாள் - இற

19. வலி - உடல்வலி

    வளி - காற்று

    வழி - பாதை

20. வலம் திசை

    வளம் - செல்வம்

21. வலை - மீன்பிடி வலை

    வளை - பொந்து, வளையல்

22. வால் - விலங்கின் உறுப்பு

    வாள் - கருவி

    வாழ் - உயிரோடு இரு

23. வாலை - இளம்பெண்

    வாளை - மீன் வகை